அசல்

8.8.32 R. விசுவநாதன்.

அசல் -1

உ

துரைத்தன விக்டோரியா கலாசாலை,
பாலக்காடு, 8-8-32.

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி ஐயரவர்கள் திவ்ய சமுகத்திற்கு மிகவும் வணக்கமாய் எழுதிக்கொண்டது. உபய க்ஷேமோபரி.

இக்கலாசாலைத் தமிழ்ச் சங்கத்தின் கூட்டமொன்று 7-8-32 அன்றைய தினம் மகாராஜஸ்ரீ ராவ் பகதூர் சேஷையரவர்கள் M.A.L.T. யின் தலைமையின் கீழ் நடைபெற்று, அதனில் கீழே காணப்பெறும் தீர்மானம் ஒரே மனதாய் நிறைவேற்றப் பட்டது.

"சமீபத்தில் சென்னைச் சர்வகலாசாலைச் சங்கத்தாரால் 'டி.லிட்' என்ற மகா கௌரவப்பட்டம் அளிக்கப் பெற்ற பிரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ.வே. சாமிநாதய்யர் டி.லிட் அவர்களை இச் சங்கம் மிகவும் பாராட்டுவதுடன் அவர்கள் இன்னும் பலகாலம் க்ஷேமமாக வாழ்ந்து, தமிழ்த்துறையில் மற்றும் பல அரிய ஊழியங்கள் புரிந்து நம் தாய்மொழியின் பெருமையை வளர்க்கத் திருவருள் சுரக்கவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்."

இத்தீர்மானத்தை மிக்கப் பணிவுடன் தங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

அநேக நமஸ்காரம்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள,
R. விசுவநாதன்
தமிழ்ப்பண்டிதர் &
உபஅக்கிராசநாதிபதி,
தமிழ்ச் சங்கம்.

அசல்

8.8.32 R. விசுவநாதன்.

Pages
348 - 349.

தொ.க. VOL 'C'

Copied.